Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 42/2019**

**Deposition of PW.6 (LW.7)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுந்தரவடிவேல் | ஜாதி | : | |
| த/பெ | : | சிவசங்கரன் | தொழில் | : | ஓய்வு, சார்பு ஆய்வாளர் |
| கிராமம் | : | ஒட்டன்சத்திரம் | சமயம் | : | |
| தாலுகா | : | ஒட்டன்சத்திரம் | வயது | : | 63/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.03.2026.

(1, 2 எதிரிகள் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் ஒட்டன்சத்திரத்தில் குடியிருந்துகொண்டு வருகிறேன். சார்பு ஆய்வளராக வேலை பார்த்து ஓய்வு பெற்றுவிட்டேன். நான் கடந்த 29.09.2015 ஆம் தேதி 18.00 மணிக்கு சின்னாளபட்டி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வளராக பணியில் இருந்தபோது, திண்டுக்கல் மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து வரப்பெற்ற குறிப்பாணை மற்றும் அதனுடன் இணைந்த மதுரை மண்டல பாஸ்போட் அலுவலக புகார், சின்னாளபட்டி சார்பதிவாளர் கடிதம் மற்றும் சின்னாளபட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவுபெற்றது போல் சவரிதாஸ் என்பவரது பிறப்பு சான்றிதழ் பார்வையிட்டு சின்னாளபட்டி காவல்நிலைய குற்ற எண்.424/2015 பிரிவுகள் 468, 471 இதச உடன் இணைந்த பிரிவு 12(1)(b) of Passport Act 1967 ஆக வழக்கு பதிவு செய்தேன். அந்த அச்சு முதல் தகவல் அறிக்கை **(அ.சா.ஆ.2/PW.6)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இதன் முதல் தகவல் அறிக்கை அசல் மற்றும் மேற்படி கடிதங்கள் இணைத்து நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட மேல் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன். வழக்கின் மேல்நடவடிக்கைக்காக வழக்கு கோப்புகளை காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன். இது பற்றி காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நீங்கள் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில் எதிரிகளின் பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சின்னாளபட்டி காவல்நிலையத்தில் இருந்து நீதிமன்றத்திற்கு செல்ல எவ்வளவு நேரம் ஆகும் என்றால் 1/2 மணி நேரத்தில் செல்லலாம். முதல் தகவல் அறிக்கை 25.09.2015 அன்று பதியப்பட்டு 05.10.2015

அன்று நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்திற்கு 10 நாட்கள் காலதாமதமாக அனுப்பியதற்கான குறிப்பிட்ட காரணம் சொல்லவில்லை என்றால் சரிதான். நீங்கள் சொன்ன நாளில், சொன்ன நேரத்தில் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதியவில்லை என்றும், பின்னிட்டு முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

முதல் தகவல் அறிக்கை காலம் 14 ல் புகார்தாரரிடம் கையொப்பம் பெறவில்லை என்றால் சரிதான். விசாரணை மேற்கொள்ளாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ஆய்வாளர் தான் விசாரணை மேற்கொள்வார். மேல் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor